உ

கடவுள்துணை.

மதனசுந்தரி ஓடிச்சிந்து.

சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1902.

கடவுள் துணை.

மதனசுந்தரி ஓரடிச்சிந்து.

டம்பாச்சாரி.

வண்டுநிகர்விழியாளே மாவமுதமொழியாளே
தண்டையணிகழலாளே தாரணிந்தக்குழலாளே
அண்டுமதன் துணையாளே அளவிலாவெழிலாளே
மண்டுநடையொயிலாளே மாகுரலிற்குயிலாளே.
ஒண்டொடியேமாணிக்கமே—என் கண்ணுட்டி.
உனக்கிணைசொல்வதுண்டோ.

மதனசுந்தரி.

ஆசையுள்ளக்கண்ணாளா அழகியமணவாளா
வாசமணியுயர்தோளா வர்னசோடணிதாளா
வீசுமலர்க்கணைவேளால் வெதுப்பாதேயென்னைவாளா
ஈஸ்வரியேயென்னையாளா வென்றுநான்வெகுநாளாய்
பூசனைபுரிந்தேனடா—என்கண்ணாளா
புஷ்பங்கரத்தெடுத்தே.

டம்பாச்சாரி.

வட்டமணையின்மீது திட்டமுடனிருந்து
தொட்டுகழுத்தில்தாலி கட்டியவென்னுடைய
மட்டிமனைவியெனும் தர்ட்டிச்சனவோர்பீச்சை
கிட்டியென்காலினால் எட்டியுதைத்துத்தள்ளி
உந்தனிடம்வாழ்வதல்லால்—என்கண்ணுட்டி
யொருவருடன்வாழ்வதுண்டோ.

மதனசுந்தரி.

கலிக்கித்துராயழகும் கஸ்தூரிப்பொட்டழகும்
சிலுப்பாமினுக்கழகும் சேர்கிருதாவழகும்
தலைப்பாகையினழகும் சரிகைறுமாலழகும்
நலமாம்வடிவழகும் நடையின்ஒயிலழகும்

கண்டபோதேஎன்னுடைய வென்கண்ணளா
கருத்தையுருக்குதடா.

டம்பாச்சாரி.

வஞ்சியாமிளங்கொடியே மதவாரணப்பிடியே
விஞ்சுமெழிற்பைங்தொடியே மென்மருங்குற்றுடியே
நெஞ்சினிலென்றுங்குடியே நீங்குவனோநொடியே
தஞ்சமுன்மலரடியே தானடைந்தேனடியே

பஞ்சையென்மனையாளைநான்—என்கண்ணாட்டி
பறக்கவடித்திடுவேன்.

மதனசுந்தரி.

காட்டிக்கொடுத்ததெய்வம் கருணைபுரிந்ததெய்வம்
நாட்டினுயர்ந்ததெய்வம் நலம்பெறச்செய்ததெய்வம்
பாட்டினுயர்ந்ததெய்வம் பணிவிடைசெய்யுந்தெய்வம்
கூட்டிக்கொடுக்குந்தெய்வம் குளிர்முகம்பார்த்ததெய்வம்

கும்பகோணத்தெய்வமல்லவா—என்கண்ணளா
குலதெய்வம்—வேறுசொல்லவா.

டம்பன்.

இன்சால்மென்டாக்டினின்றுந் தப்பித்துக்கொண்டு மதனசுந்தரி வீட்டுக்குவந்து படுத்திருப்பவளை எழுப்ப அவள் பராமுகமாயிருப்பதைக் கண்டுசொல்லுதல்.

தேசுலவுமடமானே தெவிட்டாதசெந்தேனே
ஆசையோடுதினம்நானே அடுத்தின்பஞ்செய்தேனே
வேசிகட்குள்உன்னைத்தானே மேலாகநினைத்தேனே
காசினியளித்தோனே கருத்திலறிவானே

வாசமலர்க்குழன்மயிலே குயிலே
வருத்தமென்ன தையலே.

மதனசுந்தரி தாயை அழைத்து சொல்லுதல்.

பூதலத்தனேகதவம் புரிந்தென்னைப்பெற்றவளே
காதலுடனேவளர்த்துக் கலையேற்றிவிட்டவளே
மாதாவேயாரோவோர் மனிதனருகில்வந்து
பாதாரவிந்தம்பணிகுவேனென்றும்
என் கண்ணே பொன்னே யெண்ணுங் கார்குயிலே
வண்ணக்கலாபமுடை மாமயிலேயென்று
மூச்சுவிடாமல் மொருகுகிறனரோ
காச்சல்குளிரினல் கனவருத்தமடைந்து
ஐந்தாறுநாளாக அன்னபானமில்லாமல்
சிந்தைநொந்திருக்குமிந்த ஸ்திதியிலெந்தனுக்கு
மாப்பிள்ளையொன்றுதானே மாநிலத்திலேகுறைநவு
தாப்புள்ளசெல்வமெல்லாம் தாறுமாறுகவழித்து
வாரண்டுங்கையுமாக மாட்டிக்கொண்டிருப்பவர்க்கு
தாராண்டுங்குழலுடை. தாசிவீட்டுக்கென்னவேலை

பேயனைபோசச்சொல்லடி—என்னம்மணி
பேசவும்சீவனில்லடி.

கிழவி—தெம்மாங்கு.

எவனவண்டி உன்னைவந்து எத்துகிறமூளியவன்
தவடைதனில்போடாமல் தாமதங்கள்செய்வானேன்.

டம்பன்—சிங்காரச்சிந்து.

நா-நா-நன்னனே-நன்னனே-நன்னனே
எந்தனறுமைமாமி இன்சால்வெண்டாக்ட்டில்
என்னுடையவல்லமையால் தப்பித்துவந்தேன்
சொந்தவுன்மருமகனாய் சுந்தரியோடுநான்
சொகுசாகவாழ்ந்திருப்பேன்
சுகமே யினிமேலம்மா.

கிழவி—தெம்மாங்கு.

உன்னுடையவல்லமையை உண்மையொடுசொல்வதற்கு
என்னுடையநாவாலே எவ்வளருங்கூடுமோ.

சிந்து.

அந்தமட்டுங்கெட்டிக்கார ஆண்பிள்ளைதானப்பா
அவனியிலுனக்கிணையாரைச்சொல்லுவதப்பா
உந்தனால்நாங்கள்கண்ட தொருகோடியுண்டப்பா
உறவின்லெங்களுக்கு உதவாதுநடவப்பா.

டம்பாச்சாரி—தெம்மாங்கு.

நன்றிகெட்டகிழப்பிணமே ஞாயமோநீங்களென்றால்
தின்றுவிட்டசெல்வமெல்லாம் செரித்ததென்றோ சிந்தித்தீர்.

சிந்து.

நாலுலட்சம்விலையுள்ள நகைகள்கொடுத்தேனே
நாலடுக்குமெத்தைவீடு நலமாயெடுத்தேனே
கோலச்சரிகைச்சேலை கொஞ்சமோவளித்தது
குணங்கெட்டப்படிநீங்கள் கூறினும்போவேனே.

கிழவி—தெம்மாங்கு.

பொறுக்கிதின்னநாயே நீ புளுகுஎங்கே கற்றுக்கொண்டாய்
நறுக்கிவிடப்போறார்கள் எங்களுக்கு நகைகள் செய்துவைத் [தோர்கள்.

சிந்து.

கப்பல்துபாசியாலே காட்டுக்கிடைத்ததடா
கனகராயவேளாலே கண்டிகிடைத்ததடா
அப்பாராவுவேளாலே மற்றெல்லாம்கிடைத்ததடா
அறிவுகெட்டோனேயுன்னால் அணுவுமறியோமடா.

டம்பாச்சாரி—தெம்மாங்கு.

பலதினமுமுங்களைநான் பட்சமுடன்கார்த்ததெல்லாம்
இலவுதனைகார்த்திருந்த வேழைக்கிளிபோலாச்சே

சிந்து.

அன்பின்மிகுமெந்தன் அழகுமனையாளை
அரிதானபிள்ளைகளை அலையவிட்டுங்களுக்கே
இன்பமிகுமென் ஸ்திதி எல்லாம்தொலைத்தேனே
எள்ளளவாகிலுநன்றி யில்லாமற்போச்சுதே.

கிழவி—தெம்மாங்கு.

குடிக்கக்கஞ்சியில்லாத குடிகேடநாய்ப்பயலே [றிப்பயலே
இடிக்கப்போறேன் கொடிசையைப்பார்த் தேதுங்கெட்டவெ

சிந்து.

ஆருக்குன்னஸ்தியெல்லா மளித்தாயதுவல்லாதே
ஆராலேநீயோட்டாண்டி யானயது நீசொல்லடா
ஈரும்பேனும்பிடித்த எருமைக்கடாவே
என்முன்வடாகூடம்பேசாதே எடுப்பேன்பழமுறத்தை.

டம்பாச்சாரி—தெம்மாங்கு.

நான்கொடுத்ததுங்களுக்கு நாலுதலைமுறைக்குண்டே
எந்தனையபகரித்தே இப்படிநீயேசுகிறாய்.

சிந்து.

பத்துலட்சம்விலையுள்ள பங்களாகட்டினேன்
பகர்மெத்தையெல்லாம்குளோப்புப் படங்களாயாக்கினேன்
எத்தனைவிதலஸ்டர்கள் எழிலாகமாட்டினேன்
என்னபட்டுங்குடத்தி லிட்டவிளக்காச்சே.

கிழவி—தெம்மாங்கு.

சிறுக்கிதனைவசப்படுத்த சிந்தைதனிலெண்ணினையோ
செறிப்பாளோவுந்தனுக்குச் செருப்புதிண்ணநாய்மகனே

சிந்து.

தந்ததற்கும்வந்ததற்கும் சரிப்பட்டுப்போச்சுதடா
தலைவாசல்மிதியாமல் தப்பித்துக்கொள்ளடா
சொந்தம்பாராட்டிநின்றால் சும்மாயிரேனினித்
துடப்பக்கட்டைமுறியும் சொன்னேன்சொன்னேனடா

தாய்க்கிழவி டம்பனுக்கு திரவியங் கிடைத்தபின்பு வந்து எத்துதல்.

ஆசைமிகுமென்னுடையஅருமைமருமகனே
தேசுலவுமன்மதன்போற் சிறந்தவழகோனே
உத்தமனேசத்தியனே உலகினிற்சீமானே
மெத்தவும்புகழுடைய மேன்மைதருங்கோமானே

நாற்பதுசென்றாக்கால்நாய்குணமென்பார்கள்
தோத்திரையான பேய்த்தோஷிநான்தெரியாமல்
மதுவுண்டமயக்கத்தால் மதியழிந்துன்னைநான்
இதமில்லாவார்த்தைகள் எத்தனையோபேசிவிட்டேன்
உள்ளமதில்எள்ளளவு மன்னுமெலென்னுடைய
தெள்ளுமணியாமதன் சிங்காரசுந்தரியை
நித்தியமும்வைத்திருந்து நித்திலக்கழைச்சிலைக்கொள்
சித்தஜன்செருக்கொழிய சித்தமதில்சற்றுகிருபை
செய்யடாவென்சாமிகண்ணேசெய்யாவிட்டாலெந்தன்
தையலவள்வெய்யமாரன் பெய்யுமம்பினால்நொந்து
பாரறியவுன்மீதிற் பழிபோடுவாள்சொன்னேன்

சீரிலுயர்ந்திடுசிங்கமே—சங்கமே
தேசம்புகழ்துங்கமே.

விருத்தம்.

இப்படியெத்தவந்த விதமிலாக்கிழவியோடு
மைப்படிகண்ணாளென்று மதனசுந்தரியைடம்பன்
ஒப்புக்கொள்ளாமல்நீக்கி யொண்டொடிமனையாளோடும்
இப்படிதனிலேமிக்கவிசையொடு வாழ்ந்திட்டானே.

மதனசுந்தரி ஓரடிச்சிந்து

முற்றிற்று.